(ஒன்பதாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

**இல. 58.]**

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2023 சனவரி 20 வெள்ளிக்கிழமை  மு.ப. 9.30 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ  மஹிந்த யாப்பா அபேவர்தன,** சபாநாயகர்

**கௌரவ  அஜித் ராஜபக்ஷ,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

---

**கௌரவ தினேஷ் குணவர்தன,** பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

**கௌரவ நஸீர் அஹமட்,** சுற்றாடல் அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,** போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண,** பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மற்றும் கைத்தொழில் அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி (கலாநிதி) சுசில் பிரேமஜயந்த,** கல்வி அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

**கௌரவ விதுர விக்ரமநாயக,** புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ சஜித் பிரேமதாச,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ லசந்த அலகியவன்ன,** போக்குவரத்து இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அ. அரவிந்த் குமார்,** கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அநுராத ஜயரத்ன,** நீதிமன்ற மற்றும் சிறைச்சாலை அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி மொஹான் பிரியதர்ஷன த சில்வா,** கமத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அசோக்க பிரியந்த,** உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ தாரக்க பாலசூரிய,** வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ விஜித பேருகொட,** பிரிவெனாக் கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) சுரேன் ராகவன்,** உயர் கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜானக வக்கும்புர,** மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ கனக ஹேரத்,** தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர்

---

**கௌரவ சம்பத் அதுகோரல**

**கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க**

**கௌரவ வஜிர அபேவர்தன**

**கௌரவ (கலாநிதி) மேஜர் பிரதீப் உந்துகொட**

**கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன**

**கௌரவ ஜயந்த கெட்டகொட**

**கௌரவ மனோ கணேசன்**

**கௌரவ யதாமிணீ குணவர்தன**

**கௌரவ நலீன் பண்டார ஜயமஹ**

**கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா**

**கௌரவ துமிந்த திசாநாயக்க**

**கௌரவ சட்டத்தரணி பிரேம்நாத் சி. தொலவத்த**

**கௌரவ எச். நந்தசேன**

**கௌரவ (டாக்டர்) கயாஷான் நவனந்த**

**கௌரவ (பேராசிரியர்) ஜீ.எல். பீரிஸ்**

**கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா**

**கௌரவ ரோஹண பண்டார**

**கௌரவ (பேராசிரியர்) ரஞ்சித் பண்டார**

**கௌரவ சுதத் மஞ்சுல**

**கௌரவ இம்ரான் மஹ்ரூப்**

**கௌரவ மொஹமட் முஸம்மில்**

**கௌரவ பீ.வை.ஜீ. ரத்னசேக்கர**

**கௌரவ குமாரசிறி ரத்னாயக்க**

**கௌரவ இஷாக் ரஹுமான்**

**கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ**

**கௌரவ நிமல் லான்சா**

**கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ**

**கௌரவ சமிந்த விஜேசிறி**

**கௌரவ எம். டப்ளியு. டீ. சஹன் பிரதீப் விதான**

**கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே**

**கௌரவ ஹேஷா விதானகே**

**கௌரவ வீரசுமன வீரசிங்ஹ**

**கௌரவ தருமலிங்கம் சித்தார்தன்**

**கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி**

**கௌரவ ஜோன் செனவிரத்ன**

**கௌரவ கபீர் ஹஷீம்**

**கௌரவ (பேராசிரியர்) சரித்த ஹேரத்**

திருமதி குஷானி ரோஹனதீர, பணியாட்டொகுதிப் பிரதானியும் பிரதிப் பாராளுமன்றச் செயலாளர் நாயகமும்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

1. ***சபாநாயகரின் அறிவித்தல்கள்***: சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல்கள் விடுத்தார்:—

**I**

“2023 சனவரி 17 ஆம் திகதிய எனது அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட மனுக்களுக்கு மேலதிகமாக, அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் ‘கப்பற்றொழில் முகவர்களுக்கு, சரக்கனுப்புநர்க்கு, கலன்செயற்படுத்தாப் பொதுக்காவுநர்க்கு மற்றும் கொள்கலன் செயற்படுத்துநர்க்கு உரிமமளித்தல் (திருத்தம்)’ எனும் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட மேலுமொரு மனுவின் பிரதி எனக்குக் கிடைத்துள்ளதென்பதை பாராளுமன்றத்திற்கு அறிவிக்க விரும்புகின்றேன்.”

**II**

“‘இலங்கையில் உயர்கல்வி வாய்ப்புகளை விரிவுபடுத்துவதற்குப் பொருத்தமான விதப்புரைகளைச் சமர்ப்பிப்பதற்குமான பாராளுமன்ற விசேட குழுவில்’ கடமையாற்றுவதற்காக கௌரவ சனாதிபதி சட்டத்தரணி (கலாநிதி) விஜயதாச ராஜபக்ஷ அவர்களின் தலைமையில் பின்வரும் உறுப்பினர்கள் தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டுள்ளனர் என்பதை அறிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்:-

கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண

கௌரவ (டாக்டர்) (திருமதி) சீதா அரம்பேபொல

கௌரவ (கலாநிதி) சுரேன் ராகவன்

கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்

கௌரவ சட்டத்தரணி அநுர பிரியதர்ஷன யாபா

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க

கௌரவ இரான் விக்கிரமரத்ன

கௌரவ (பேராசிரியர்) ரஞ்சித் பண்டார

கௌரவ (பேராசிரியர்) சரித்த ஹேரத்

கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய”

**III**

“‘பாராளுமன்ற உறுப்பினர்களினதும் பாராளுமன்றத்தினதும் சிறப்புரிமைகள் மீறப்படுதல் தொடர்பில் விசாரிப்பதற்கும் அது தொடர்பில் பொருத்தமான விதப்புரைகளைச் சமர்ப்பிப்பதற்குமான விஷேட குழுவில்’ கடமையாற்றுவதற்கான கௌரவ சட்டத்தரணி நிமல் சிறிபால த சில்வா அவர்களின் தலைமையில் பின்வரும் உறுப்பினர்கள் தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டுள்ளனர் என்பதை அறிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்:-

கௌரவ (கலாநிதி) சுரேன் ராகவன்

கௌரவ கயந்த கருணாதிலக்க

கௌரவ சட்டத்தரணி அநுர பிரியதர்ஷன யாபா

கௌரவ வஜிர அபேவர்தன

கௌரவ நிமல் லான்சா

கௌரவ எம்.ஏ. சுமந்திரன்”

**2. பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல்:** (1) கல்வி அமைச்சர், மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயமான), 25 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 32 ஆம் பிரிவின் கீழ் மென் மதுபான உரிமங்கள் தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 யூலை 28 ஆந் திகதிய 2290/24 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலைச் (மதுவரி அறிவித்தல் இலக்கம் 05/2022) சமர்ப்பித்து, அவ்வறிவித்தல் அரசாங்க நிதி பற்றிய குழுவிற்கு கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(2) கல்வி அமைச்சர்—

(i) 2019 ஆம் ஆண்டுக்கான இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை; மற்றும்

(ii) 2020 ஆம் ஆண்டுக்கான தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கைகள் கல்வி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3) கல்வி அமைச்சர்—

(i) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 21 ஆம் பிரிவு மற்றும் 139 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 27(1) ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையுடன், இலங்கை றுகுணு பல்கலைக்கழகத்தில் விவசாய பொறியியல் மற்றும் சுற்றாடல் தொழில்நுட்பம் துறையொன்றை நிறுவுதல் தொடர்பில் கல்வி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 செப்டெம்பர் 30 ஆம் திகதிய 2299/66 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை;

(ii) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 21 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 27(1) ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையுடன், இலங்கை சப்பிரகமுவ பல்கலைக்கழகத்தில் ஆரம்ப சிகிச்சை மற்றும் குடும்ப மருத்துவத் துறையொன்றை நிறுவுதல் தொடர்பில் கல்வி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 செப்டெம்பர் 30 ஆம் திகதிய 2299/67 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை;

(iii) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 21 ஆம் பிரிவு மற்றும் 139 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 27(1) ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையுடன், இலங்கை றுகுணு பல்கலைக்கழகத்தில் விவசாய பொருளியல் மற்றும் விவசாய வியாபார துறையொன்றை நிறுவுதல் தொடர்பில் கல்வி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 ஒக்டோபர் 11 ஆம் திகதிய 2301/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை; மற்றும்

(iv) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 21 ஆம் பிரிவு மற்றும் 139 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 27(1) ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையுடன், இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கணினியியல் துறையொன்றை நிறுவுதல் தொடர்பில் கல்வி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 ஒக்டோபர் 27 ஆம் திகதிய 2303/24 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை

ஆகியவற்றைச் சமர்ப்பித்தார்.

மேற்படி பத்திரங்கள் **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(4) கல்வி அமைச்சர், 2018 ஆம் ஆண்டுக்கான நெல் சந்தைப்படுத்தல் சபையின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை கமத்தொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**3. குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பித்தல்**: (1) அரசாங்க நிதி பற்றிய குழுவின் தவிசாளர் கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா அவர்களால், அக்குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட, 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

அவ்வறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(2) அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவின் தவிசாளர், கௌரவ (பேராசிரியர்) ரஞ்சித் பண்டார ஒன்பதாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடருக்கான அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவின் இரண்டாவது அறிக்கையை சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனவும் **அச்சிடப்பட** வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

**4. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:**

கலிகமுவ நகரம், பள்ளபான, வென்தேசிவத்த எனும் முகவரியில் வதியும் திரு. ஆர்.எம். கீர்த்தி குணரத்னவினது 2022.10.23 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ தாரக்க பாலசூரிய சமர்ப்பித்தார்.

மேற்படி மனு பாராளுமன்ற நிலையியற் கட்டளை 30(10) இன் கீழ் பொது மனு பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

**5. அனுதாபப் பிரேரணைகள்:** காலஞ்சென்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களாகிய கௌரவ உபாலி தசநாயக்க,கௌரவ (டாக்டர்) நெவில் பர்னாந்து, கௌரவ குணரத்ன வீரக்கோன் மற்றும் கௌரவ ராஜா கொள்ளுரே ஆகியோர் தொடர்பான அனுதாபப் பிரேரணைகளை கல்வி அமைச்சர் பிரேரித்தார்.

கௌரவ வீரசுமன வீரசிங்க தலைமைதாங்குவாராக" என நீதிமன்ற மற்றும் சிறைச்சாலை அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(மு.ப. 11.01 மணிக்கு கௌரவ வீரசுமன வீரசிங்க தலைமை தாங்கினார்.)

"கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே தலைமைதாங்குவாராக" கமத்தொழில் இராஜாங்க அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(மு.ப. 11.24 மணிக்கு கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே தலைமை தாங்கினார்.)

"காலஞ்சென்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களாகிய கௌரவ உபாலி தசநாயக்க,கௌரவ (டாக்டர்) நெவில் பர்னாந்து, கௌரவ குணரத்ன வீரக்கோன் மற்றும் கௌரவ ராஜா கொள்ளுரே ஆகியோரின் மறைவையொட்டி பாராளுமன்றத்தில் இரங்கலுரை நிகழ்த்திய இரு தரப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஆற்றிய அனுதாபப் பிரேரணைகளை அங்கீகரித்து சபாநாயகருடன் இணைந்துகொண்ட தலைமைதாங்கும் உறுப்பினர் இவ்வுரைகள் அடங்கிய இன்றைய தின பாராளுமன்ற அதிகார அறிக்கையொன்றின் (ஹன்சாட்) பிரதிகளை, மறைவினால் துக்கத்தில் ஆழ்ந்துள்ள அவர்களின் குடும்பத்தவர்களுக்கு அனுப்பிவைக்குமாறு பாராளுமன்றச் செயலாளர் நாயகத்திற்குப் பணிப்புரை வழங்கினார்.

**6. ஒத்திவைப்பு:** “இப் பாராளுமன்றம் இப்போது ஒத்திவைக்கப்படுமாக” என பாராளுமன்றச் சபை முதல்வர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன்படி பாராளுமன்றம் தலைமை தாங்கும் உறுப்பினரால் பி.ப. 12.33 மணிக்கு, 2023 பெப்ரவரி 07 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 9.30 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.